**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.**

**O.S.No. 245/2024**

சாட்சி : PW– 1
பெயர் : திரு. நந்தகுமார் தேதி : 28.07.2026

(சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார். )

**குறுக்குவிசாரணை தொடர்ச்சி**:– ( பிரதிவாதிகள் தரப்பில்)

நான் இன்ஜினியரிங் வரை படித்துள்ளளேன். வா.சா.ஆ–7 ஆவணத்தை பெருமாள் மற்றும் சித்தன் சி.கே. தனபாலுக்கு எழுதிக் கொடுத்துள்ளார்கள். மேற்படி ஆவணம் 03.07.2002 அன்று எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் கண்டுள்ள சொத்தை சுவாதீனம் ஒப்படைத்துள்ளதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே 03.07.2002 தேதியிலேயே நாங்கள் வழக்கு சொத்துகளில் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. 03.07.2002 தேதியில் நாங்கள் வழக்கு சொத்துகளில் சுவாதீனத்தில் இருந்தோம் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ–8 ஆவணம் 06.10.2010 அன்று சி.கே.தனபால் வகையறா ஆனந்தபாபு வகையறாவுக்கு எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரம் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்திலும் ஆனந்தபாபு வகையறாவுக்கு சொத்துகளில் சுவாதீனம் ஒப்படைத்ததாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் 06.10.2010 தேதியில் நாங்கள் வழக்கு சொத்துகளில் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. 06.10.2010 தேதியில் நாங்கள் வழக்கு சொத்துகளில் சுவாதீனத்தில் இருந்தோம் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.9 ஆவணம் ஆனந்தபாபு மற்றும பிரபாகரன் ஒரு 19 நபர்களுக்கு 11.10.2010 அன்று எழுதிக்கொடுத்த கிரய ஆவணம் என்றால் சரிதான்.

R Velaras
Digitally signed by R Velaras
Date: 2026.07.28 11:53:13 +0530
I Additional District Judge,
Salem

அதில் என் பெயர் இல்லை என்றால் சரிதான். 11.10.2010 தேதியில் நாங்கள் வழக்கு சொத்துகளில் சுவாதீனத்தில் இருந்தோம் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ஆவணம் ஆனந்தபாபு மற்றும பிரபாகரன் ஆகியோர்களும், சுந்தராம்பாள் வகையறாவும் 22.05.2015 அன்று ஒரு சம்மதபத்திரம் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். அதில் என் பெயர் இல்லை என்றால் சரிதான். 15.07.2016 ஆனந்தபாபு மற்றும் பிரபாகரன் 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு கிரயம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு சுவாதீனம் கொடுத்ததாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். 15.07.2016 தேதியில் நாங்கள் வழக்கு சொத்துகளில் சுவாதீனத்தில் இருந்தோம் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு 19.03.2024ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்யும் தேதியில் வழக்கு சொத்தில் நாங்கள் சுவாதீனத்தில் இருந்தோம் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தின் விஸ்தீரணம் 21 சென்ட் ஆகும். நாங்கள் 2002ம் ஆண்டிலேயே வழக்கு சொத்தில் சுவாதினத்தில் இல்லை என்றும், அதனால் அதிலிருந்து 12 வருட காலத்திற்குள் சுவாதீனம் கோரி வழக்கை தாக்கல் செய்திருக்கவேண்டும் என்றும், சுமார் 22 ஆண்டுகள் கழித்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ள காரணத்தினால் எங்கள் வழக்கு காலவரையறையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே எங்கள் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.

R Velaras Digitally signed by R Velaras Date: 2026.07.28 11:53:18 +0530

I Additional District Judge,
Salem